செ.வெ.எண்: 791/2016 நாள்:10.11.2016

**மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங். ரா. சவான், இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு சுய தொழில் புரிய உதவும் வகையில் இரு கைகளும் நல்லநிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்க 2016-2017ம் நிதியாண்டிற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இரு கைகளும் நல்லநிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் இதுநாள்வரை தையல் இயந்திரம் பெறாதவர்களாக இருப்பின் தேசிய மாற்றுத் திறனாளிகள் அடையாள அட்டை நகல், குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்று மற்றும் தையல் தெரியும் என சான்று அல்லது தையல் கலை பயின்றதற்கான சான்று நகல் ஆகிய சான்றிதழ்களின் நகல்களோடு 25.11.2016க்குள் நாகர்கோவில் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பிக்கும்படியும், மேலும் விவரங்களுக்கு 04652 279411 ___ என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங். ரா. சவான், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகர்கோவில்.